# கண்ணனும் இராமனும்

சிறுவர் கதைகள்



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணனும் இராமனும்

சிறுவர் கதைகள்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : கண்ணனும் இராமனும்

வகை : சிறுவர் இலக்கியம்

ஆசிரியர் : ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்)

உரிமை : ஆசிரியருக்கு

ISBN : 955-98211-3-X

அட்டைப்படம்

ஓவியங்கள் : ச.அ. அருள்பாஸ்கரன்

வெளியீடு : அருள் வெளியீடு

முதற்பதிப்பு : 24-01-2007

பதிப்பகம் : கிறிப்ஸ்

பக்கம் : 40

விலை : ரூபா 75.00

கிடைக்கும் இடம்: லங்கா புத்தகசாலை
F. L. 1/14 டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர
கொழும்பு.

கிழக்கிலங்கையின் கல்விப்பயிர் செழிக்க உழைத்த இராமகிருஸ்ண சங்கத் துறவிகளான வித்தகன் விபுலானந்த அடிகளாருக்கும் அமரர் சுவாமி நடராஜானந்தா அவர்களுக்கும் எனது வழிகாட்டியாக அமைந்த சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அமரர் க. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் அமரர் சுவாமி ஜீவனானந்த மகராஜ் அவர்களுக்கும் திருகோணமலை இலக்கிய வித்தகன் கலாவிநோதன் சித்தி அமரசிங்கம் அவர்களுக்கும் இந்நூல் படையலாகும்.

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு

# இலங்கை தேசிய நூலபிவிருத்திச் சபை

இலங்கை ஜனநாயக சோஸலிசக் குடியரசின்

அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்களினால்

வெளிப்படுத்தப்பட்ட

## 2006 தேசிய சிறுவர் ஆண்டை முன்னிட்டு

இலங்கை தேசிய நூலபிவிருத்திச் சபை

ஏற்பாடு செய்த

சிறுவர் நூல் அச்சிடுவதற்கு உதவி வழங்கும் செயற்றிட்டத்திற்கு

திரு/~~திருமதி/செல்வி~~ ஏஸ். அருளானந்தம்

அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட

கண்ணனும் இராமனும் எனும் சிறுவர்க்கான கையெழுத்துப் பிரதி

அச்சிடத் தகைமை பெற்றது என்று இத்தால்

சான்றுபடுத்துகின்றேன்.

விஜித வெலகெதர
செயலாளர்.

குணசேனவிதான
தலைவர்.

2006 ஐப்பசி 30ம் நாள்
இசுறுபாய, கல்வி அமைச்சு
இலங்கை தேசிய நூலபிவிருத்திச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே. . .

- கண்ணனும் இராமனும்
- இலவங்கிளிகள்
- சின்னச் சிலந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

கலாபூசணம் திரு. ச. அருளானந்தம் அவர்கள் நாடறிந்த எழுத்தாளர். சிறந்த கல்விமான். ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கல்வியில் நாட்டமுள்ளவர். பல புத்தகங்களை எழுதியவர். இதுவரை இருபத்தைந்து நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அருளானந்தம் அவர்களின் "கண்ணனும் இராமனும்" என்ற சிறுவர் கதைகள் அடங்கிய நூலில் மூன்று கதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை படித்துச் சுவைக்கவும் சிந்திக்கவும் செய்யவல்லன. கண்ணனும் இராமனும் கதையில் வரும் இராமன் யார் என்பதை வாசிப்பவர் கண்டுபிடிக்காதவாறு மிக நுணுக்கமாக ஆசிரியர் எழுதிச் செல்கிறார். படித்து முடிந்ததும் ரசித்து மகிழ்வார்கள்.

இக்கதைகளுக்கு உயிர்கொடுப்பவை பொருத்தமான அழகிய ஓவியங்கள்தான். இதனை வரைந்த ஓவியர் அ. அருள்பாஸ்கரன் பாராட்டப்பட வேண்டியவர். இந்தக் கதையில் கதாசிரியர் கல்வியில் நாட்டமுடைய மாணவனைக் காட்டுகிறார். பெற்றார் மேலும் தாங்கள் வளர்க்கும் பிராணிகள்மேலும் பற்றும், பாசமும் வைத்துள்ள பிள்ளைகளைக் காணலாம். அவர்களது கள்ளமில்லா அன்பைக் காணலாம். சிறு பிள்ளைகளது இரக்க குணங்களைக் காணலாம். மாணவர்களை வழிநடத்தி அவர்களது ஆற்றலை வளர்த்தெடுக்கும் ஆசிரியர்களைக் காணலாம். சிறப்பாக மாணவர் களினதும் ஆசிரியர்களினதும் சிறப்பான மனப் பக்குவங்களைக் கதாசிரியர் விளக்கியுள்ளார். விலங்குகள் மனிதர்களுக்கு உதவுகின்ற அற்புதத்தை வாசிப்பவர்கள் புரிந்துகொள்வார்கள்.

இலவு காத்த கிளிகள் கதையைக் கேள்விப்பட்டுள்ளோம். பல நாட்கள் காத்திருந்த பொருள் கிடையாதபோது இந்தப் பழமொழியைச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் இலவங்கிளிகள் கதை நம்மைச் சிந்திக்க வைக்கிறது. கிளிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைனாக்களும் எவ்வளவு புத்திசாலித்தனமாக இயற்கையுடன் ஒன்றி வாழ்கின்றன என்பதைச் சொல்கின்றன. சிறுவர், சிறுமிகளும் பறவைகளும் நம்மை மகிழ்விக்கின்றன. படிப்பவர்களைச் சிந்திக்க வைக்கின்றன.

ஒரு மனிதனுக்குள் எத்தனை ஆற்றல்கள் உண்டு என்பதனைச் சின்னச் சிலந்தியின் கதையூடாக விளக்குகிறார். இயற்கைதான் சிறந்த ஆசிரியர். றோபட் புறூஸ், வாலகம்பாகு போன்ற சரித்திர நாயகர் பலருக்குச் சிலந்தி சிந்தித்துச் செயலாற்றும் வல்லமையைக் கொடுத்துள்ளது. அவர்களை வாழ்க்கையில் உயர வைத்துள்ளன. இவ்வாறான கதைகளை அறிந்துள்ளோம். சிறுவர்களுக்குள் அடங்கிக் கிடக்கும் ஆற்றல்கள் அளப்பரியன. அவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் கதைகள் அமைந்துள்ளன.

இந்த நூலினை கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திச் சபை "பாடசாலை நூலகங்களில் பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானது" என அங்கீகாரம் அளித்துப் பரிந்துரை செய்துள்ளது. திரு. ச. அருளானந்தம் சிறுவர் இலக்கியத்தில் தனக்கெனத் தனியான தடம் பதித்து எழுதிக்கொண்டு வருகிறார். அவரது கதைகள் படிப்பினையைத் தருவன. புதுமைகளை உணர்த்துவன. இவ்வாறான கதைகளை எழுதிவரும் திரு. அருளானந்தம் எமது ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தில் இணைந்து சேவையாற்றுவது பெருமைக்குரியது. அதனை எமது நிறுவனம் பெருமையாகக் கொள்கிறது. அவரது ஆக்கங்களுக்கு ஆதரவு தருவது கல்வி உலகத்தின் கடமையாகும். வாசகர்களாகிய உங்களது ஆதரவு கிடைக்கவேண்டும் என வாழ்த்துகிறோம். பல நூல்களை எழுதி வெளியிட உரமாக இருப்போம். அவரது பணி தொடர வாழ்த்துவோம்.

நன்றி

**செல்வி. எஸ். சூரியகுமாரி**
தலைவி

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்
தந்தை செல்வா வீதி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

திரு. ச. அருளானந்தம் சிறுவர் இலக்கியத்தில் ஈடுபட்டு எழுதி வருபவர். சிறுவர்களுக்காக சுமார் இருபது நூல்களை எழுதியுள்ள அருளானந்தம் அவர்களின் "கண்ணனும் இராமனும்" நூல் மூன்று கதைகளைக் கொண்டுள்ளது. இலங்கை கல்வி அமைச்சின் நூலபிவிருத்திச் சபை கண்ணனும் இராமனும் நூலினைப் பாடசாலை நூலகங்களில் பயன்படுத்துவதற்கு மிகப்பொருத்த மானது என பரிந்துரை செய்துள்ளது.

வாசிப்பவர்களைத் தேடலில் ஈடுபடுத்தும் வகையில் அருமையாக கண்ணனும் இராமனும் கதை எழுதப்பட்டுள்ளது. அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பதற்கேற்ப சிறுவர்களது அடிமனத்தில் உறையும் அன்பினை வெளிக்காட்டும் கட்டங்கள் நிறைந்ததாகவும் உள்ளது. இலவங்கிளிகளின் கதை புதுமையானது. சிந்திக்க வைப்பது. சிக்கச் சிலந்தி நமக்கு நமது ஆற்றலைத் தேடிக் கண்டுபிடிக்க உதவுகிறது. மிகவும் அருமை யான கதைகளைக் கொண்டுள்ள கண்ணனும் இராமனும் என்ற நூலினை எமது லங்கா நிறுவனத்தினால் வெளியிட வேண்டும் என்று திரு. அருளானந்தம் கேட்டுக்கொண்டார். திரு. அருளானந்தம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். திரு. ச. அருளானந்தம் அவர்களது நூலினை வெளியிடுவதைப் பெருமையாகக்கருதுகிறோம். அவரது நூல்களைத் தொடர்ச்சியாக வெளியிட எண்ணியுள்ளோம். அவரது நூல்களுக்கு தங்களது ஆதரவினை வழங்க உதவுகரம் நீட்ட அழைக்கின்றோம்.

நன்றி

லங்கா புத்தகசாலை
F.L.I.14 டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர
கொழும்பு - 12
தொ.பே. 011 2341942

**க. சதீஸ்**
நிறுவன முகாமையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

**யா**ரால் சிறுவர்களுக்காக எழுதமுடியும்? சிறுவர்களுக்கு எல்லோராலும் எழுதமுடியுமா? அதற்கெனச் சில ஆற்றல்கள் வேண்டுமா? எனப் பலர் கேட்பதுண்டு. சிறுவர்களுக்காக எழுதுவதற்கு ஆசையும் ஆர்வமும் வேண்டும். அவர்களுக்காக எழுதுவது ஒரு கலையாகும். மிகச் சந்தோசமான செயலும் ஆகும். சிறுவர்களுக்காக எழுதுபவர்கள் தாங்கள் சிறுவர்களாக மாறி சிந்தித்து, உணர்ந்து சந்தோசித்து எழுதுவதால் மனதால் இன்புறு கின்றார்கள். தாங்கள் அனுபவம் செய்ததை எழுதுவதால் அவை அற்புதமாகவும் அமைந்துவிடுகின்றன. சிறுவர்களுக்காகப் பாடல்களும் கதைகளும் எழுதுவது கத்திமேல் நடப்பதைப் போன்றதாகும். எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய பொருள், சந்தம் ஆகியவை தேவை. சிறுவர்கள் மிக விரும்பும் சூழலியல் அம்சங்களுடன் அவர்கள் விரும்பும் பொருள், மெட்டு ஆகியன சிறுவர்கள் கதைகளுக்கும், பாடல் களுக்கும் கனதியைக் கொடுப்பனவாகும். பொதுவாகக் கவிதை களும் கதைகளும் கணிதம் சார்ந்தவை. அவற்றுக்கென்று சில அளவுத்திட்டங்கள் உண்டு. அந்த அளவுத்திட்டங்கள் பிழைத்தால் பொருளும், ஓசைநயமும் குன்றிவிடும். தரம் சிதைந்துவிடும்.

சிறுவர்களுக்காக எழுதும்போது அவர்களாகவே மாறிவிடு கிறோம். புதுமை மனதில் புகுந்து கொள்கிறது. இளமை உடலில் வளர்ந்து கொள்கிறது. சிறுவர் உலகத்தைச் சுற்றிச்சுற்றி வலம் வருகிறோம். நாம் அனுபவித்த பெறுமதிவாய்ந்தவைகளை அவர்களுக்காகக் கூறுகிறோம். அதனை எழுதுகிறோம். மனது அமைதி பெறுகிறது. ஒரு பிரச்சினையை முன்னெடுத்து அதனைச் சிறுவர்களாகவே விடுவித்துக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் சிறுவர் களை உற்சாகப்படுத்தும். சார்ள்ஸ் டிக்கன்ஸ் அவர்களது ஒலிவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருவிஸ்ற் இதனை நன்கு தெரிவிக்கிறது. ஒலிவர் ருவிஸ்ற் சிறுவர்களுக்காக எழுதப்பட்டதல்ல. அது பின்னர் சிறுவர் இலக்கியமாக வாசகர்களால் பிரஸ்தாபிக்கப்பட்டது. நமது விமர்சனையாளர்கள் சிறுவர் இலக்கியங்களை இட்டுப் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. அவர்கள் அதனையிட்டுக் கரிசனை காட்டுவதும் மிகக் குறைவு. வேற்று மொழிகளில் எழுதப்படும் யாவற்றையும் பெரிதும் போற்றுகிறார்கள். ஆனால் நமது நாட்டில் எழுதப்படும் சிறுவர் இலக்கியங்களை இட்டுக் கவனிப்பார் யாரும் இல்லை. இலங்கை எழுத்தாளர்களது நூல்களைக் கொள்வனவு செய்து ஊக்குவிப்பாரும் அரிதாகவே உள்ளனர்.

எனது 'கண்ணனும் இராமனும்' எனும் சிறுவர் கதைகள் அடங்கிய நூலினை கல்வி அமைச்சின் இலங்கை தேசிய நூலபிவிருத்திச்சபை, நூலகத்திற்குத் தகுந்த நூலாகத் தேர்ந்தெடுத்துச் சான்றிதழ் வழங்கியுள்ளது. எனது கதைகளை வாசித்து அணிந்துரை தந்துதவிய ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத் தலைவி செல்வி.எஸ். சூரியகுமாரி அவர்களுக்கும் பின்னட்டையில் அறிமுகம் செய்யும் மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் மாவட்ட அதிகாரி திரு. வ. கலைச்செல்வன் அவர்களுக்கும் படங்களை வரைந்துதவிய எனது மகன் ச. அ. அருள்பாஸ்கரன் அவர்களுக்கும் எனது நூல்களுக்கு ஆதரவு நல்கி வரும் லங்கா புத்தகசாலை, இந்நூலினை வெளியிட முன்வந்தமைக்காக அதன் முகாமையாளர் திரு. க. சதீஸ் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நூலினை அழகுற அச்சிட்டுத் தந்த கிறிப்ஸ் நிறுவனத்தினருக்கும் எனது அபிமான வாசகர்களாகிய உங்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

நன்றி

உவர்மலை
திருகோணமலை.

**ச. அருளானந்தம்**
(கேணிப்பித்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள் . . .

| | | |
|---|---|---|
| 1. | இன்பக் கனிகள் | சிறுவர் பாடல்கள் |
| 2. | பாட்டுப் பாடுவோம் | சிறுவர் பாடல்கள் |
| 3. | காகமும் தம்பியும் | * பரிசு பெற்றது |
| 4. | பாடி ஆடுவோம் | சிறுவர் விளையாட்டுக்கள் |
| 5. | கடலும் காவிரியும் | சிறுவர் பாடல்கள் |
| 6. | சின்னச் சின்னப் பாட்டு | சிறுவர் பாடல்கள் |
| 7. | மனதுக்கினிய பாட்டு | சிறுவர் பாடல்கள் <br> * தேசிய விருது |
| 8. | ஆனந்தமான பாட்டு | சிறுவர் பாடல்கள் |
| 9. | சகோதரராய் வாழ்வோம் | சிறுவர் பாடல்கள் |
| 10. | அறிவைத் தரும் பாடல்கள் | சிறுவர் பாடல்கள் (அச்சில்) |
| 11. | பூஞ்சிட்டுக்கள் | சிறுவர் கதைகள் |
| 12. | தங்க மாம்பழம் | சிறுவர் கதைகள் |
| 13. | சின்னத் தேவதைகள் | சிறுவர் கதைகள் |
| 14. | கண்ணனும் இராமனும் | சிறுவர் கதைகள் |
| 15. | சிறகு முளைத்த கதைகள் | சிறுவர் கதைகள் |
| 16. | அற்புதமான வானம் | சிறுவர் கதைகள் (அச்சில்) |
| 17. | பளிங்குத் தீவு | சிறுவர் நாவல் |
| 18. | காட்டில் கலவரம் | சிறுவர் நாவல் |
| 19. | பயங்கொள்ளலாகாது பாப்பா | சிறுவர் நாவல் <br> * பரிசு பெற்றது |
| 20. | உல்லாசப் பயணம் | சிறுவர் நாவல் |
| 21. | மனதில் உறுதி வேண்டும் | சிறுவர் நாவல் |
| 22. | வாக்கினிலே இனிமை வேண்டும் | இளைஞர் நாவல் |
| 23. | துணிச்சல்மிக்க சுந்தரி | சிறுவர் நாவல் |
| 24. | அந்த ஆவணி ஆறு | சிறுகதைகள் |
| 25. | வம்மிப் பூ | சிறுகதைகள் |
| 26. | கேணிப்பித்தன் கதைகள் | சிறுகதைகள் |
| 27. | கேணிப்பித்தன் கவிதைகள் | கவிதைத் தொகுதி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணனும் இராமனும்

**க**ண்ணனின் குடும்பம் வறியது. அப்பா சுந்தரம் கூலி வேலைக்குப் போவார். கிடைப்பதைக் கொண்டு வாழ்க்கை நடக்கும். சில நாட்களில் வேலையும் கிடைக்காது. காசும் கிடைக்காது. அம்மா கனகம்மா வீட்டு வேலைகளைக் கவனிப்பார். அந்தக் கிராமத்தின் எல்லையில் அவர்களது வீடு இருந்தது. வீடு ஒரு கொட்டில். அவர்களுக்கு அது மாளிகை. தொழில் வசதியில்லை. வறுமையில் வாழ்க்கை ஓடுகிறது. அந்தக் குடும்பத்தில் ஐந்து ஜீவன்கள் வாழ்கின்றன. மூத்தவன் கண்ணன். ஐந்தாம் வகுப்புப் படிக்கிறான். இரண்டாவது சீதா. அவள் இரண்டாம் வகுப்பு. கடைக்குட்டி குகன் முதலாம் வகுப்புப் படிக்கிறான்.

பாடசாலை பல கிலோமீற்றர் தூரத்தில் இருந்தது. நடந்துதான் போகவேண்டும். அவர்களது சொத்து பத்து ஆடுகள் மட்டும்தான். காலையில் பிள்ளைகள் மூவரும் புறப்படுவார்கள். ஆடுகளை வயல்வெளியில் விடுவார்கள். பின்னர் பாடசாலைக்குச் செல்வார்கள். வழமையாக காலையில் கண்ணன் ஆயத்தமாவான். சீதாவையும் குகனையும் கூட்டிச் செல்வான். பின் ஆடுகளைத் துரத்திச் செல்வான். வீதியைக் கடந்து வயற்பக்கம் விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை மேயத்தொடங்கும். அவன் பாடசாலைக்குச் செல்வான். பாடசாலை விட்டதும் ஓடுவான். நண்பர்களோடு கதைப்பதற்கும் நேரமில்லை. கண்ணன் பாடசாலைக்கும் செல்ல வேண்டும். ஆடுகளையும் பார்த்துக் கொள்ளவேண்டும். கல்வியில் ஆர்வம் இருந்தது. வகுப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்தான்.

அன்றொரு நாள் பாடசாலை விட்டது. வீட்டுக்கு விரைந்து வந்தான். புத்தகங்களை வீட்டில் வைத்தான். ஆடுகளின் சத்தம் கேட்டது. வெளியில் வந்தான். ஆடுகள் வீதியைக் கடந்து ஓடி வந்தன. ஆடுகளைப் பார்த்தான். அவை சத்தமிட்டவாறு நடுங்கின. சிலவற்றைக் காணவில்லை. குட்டிகளையும் காண வில்லை. அவற்றைத் தேடி ஓடினான். வயற்பக்கம் புதர்கள் இருந்தன. புதர்களைச் சுற்றித் தேடினான். தூரத்தே சில ஆடுகள் நின்றன. அவனைக் கண்டதும் அலறின. அவற்றை ஒன்று சேர்த்தான். கணக்கிட்டான். ஒரு குட்டியைக் காணவில்லை. பம்பரமாகச் சுழன்றான். முனகல் சத்தம் புதருக்குள் கேட்டது. அவனுக்குப் பயமாக இருந்தது.

ஒரு கல்லை எடுத்து வீசினான். நரியொன்று அதனுள் இருந்து ஓடியது. துணிவுடன் புதருக்குள் நுழைந்தான். அந்தக் காட்சி அவனைத் திணறவைத்தது. அழுகை பொத்துக்கொண்டு வந்தது. ''அம்மா.. என் ஆட்டுக்குட்டி அம்மா..'' சத்தமிட்டு அழுதான். அவனது ஆட்டுக்குட்டி துடித்துக் கொண்டிருந்தது. கால்களை இழுத்தது. அவ்வளவுதான் அதன் உயிர் பிரிந்துவிட்டது. அதனைத் தூக்கியவாறு வெளியில் வந்தான். அவனது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அழுதவண்ணம் ஆடுகளைத் துரத்திக் கொண்டு வந்தான். தாயாடு கதறிய வண்ணம் அவனைப் பின் தொடர்ந்தது. அவனது தங்கை சீதா ஓடிவந்தாள். ''சீதா! நமது ஆட்டுக்குட்டி செத்துப்போச்சுது'' அழுதபடியே கூறினான். தம்பி குகன் அழுதான். ''அம்மா ஆட்டுக்குட்டியை நரி பிடித்து விட்டது. அது செத்துப் போச்சுது.'' அழுதழுது சொன்னான். அவன் கைகளில் ஆட்டுக்குட்டி கிடந்தது. கனகம்மா பதறியடித்து வெளியில் வந்தாள். அவளது முகம் இருண்டு கிடந்தது. அவர்களது சொத்து பத்து ஆடுகள்தான். அதில் ஒன்று செத்துப் போய்விட்டது. அவனது அப்பா வேலைதேடி அன்றும் அலைந்தார். வேலை ஒன்றும் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா சுந்தரம் களைத்து வந்தார். மனதில் கவலை குடிகொண்டிருந்தது. ஆட்டுக்குட்டியின் செய்தி அவரது காதுகளில் பாய்ந்தது. அது அவரைக் கொதிக்க வைத்தது. கோபம் கொண்டார். முன்பின் யோசிக்கவில்லை. "எங்கடா போனாய்? என்னடா செய்து கொண்டிருந்தாய்?" அவரது வாயிலிருந்து சொற்கள் பாய்ந்தன. அவரது கைகள் விளையாடின. கண்ணனின் முதுகில் அடிவிழுந்தது. அவன் துடித்து விட்டான். மூலையில் இருந்து அழுதான். ஆளுக்காள் மூலையில் ஒதுங்கினார்கள். யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? கண்ணன் அப்பா அடித்ததற்காக அழவில்லை. அன்பான ஆட்டுக்குட்டிக்காக அழுதான். வீட்டில் சோகம் குடிபுகுந்தது.

அழுகையின் பின் அமைதி நிலவியது. கண்ணன் எழுந்தான். அம்மாவிடம் சென்றான். "அம்மா பழைய துணி தாருங்கள்." என்றான். அவனது கருத்தைப் புரிந்து கொண்டாள். பழைய வெள்ளைத் துணியைக் கொடுத்தாள். ஆட்டுக் குட்டியின் பக்கம் போனான். சீதாவும், குகனும் வந்தார்கள். சில தடிகளை எடுத்தார்கள். சிறு கட்டில்போல் செய்தார்கள். ஆட்டுக்குட்டியை அதன்மேல் கிடத்தினார்கள். அழுதார்கள். சீதா பூக்களை அதன்மேல் தூவினாள். கண்ணன் ஒரு பக்கம் தூக்கினான். சீதாவும் குகனும் மறுபக்கத்தைத் தூக்கினார்கள். வளவின் எல்லைக்குச் சென்றார்கள். குழியைத் தோண்டினார்கள்.

பிள்ளைகளின் செயலைப் பெற்றோர்கள் கண்டார்கள். அந்த இடத்திற்கு அவர்களும் சென்றார்கள். ஆட்டுக்குட்டியைக் குழியினுள் வைத்தார்கள். அழுதவண்ணம் மண்ணைத் தூவினார்கள். சுந்தரம் பிள்ளைகளைத் தழுவினார். கண்ணனுக்கு அடித்ததை எண்ணினார். அவனை அணைத்துக் கொண்டார். விம்மி விம்மி அழுதார். தன்னை நொந்து கொண்டார். அவரை வாஞ்சையோடு கட்டிக் கொண்டார்கள். கனகம்மா ஒப்பாரி வைத்தாள். அன்று இரவு யாரும் உண்ணவில்லை. அன்றிலிருந்து கண்ணனது மனம் மாறியது. பெற்றோருக்குத் துணையாக இருப்பது நல்லது. பாடசாலை செல்வது அரிதாகியது. இடைக்கிடை செல்வான்.

ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. கண்ணன் மரத்தின் கீழ் இருந்தான். அவன் எண்ணமெல்லாம் பாடசாலையில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பதைப் பற்றியே யோசித்தான். அவன் கையில் புத்தகம் இருந்தது. அதனை வாசித்தான். 'ஏழைகளுக்குக் கடவுள் துணையிருப்பார்.' அதனை உரத்துப் படித்தான். மேலே பார்த்த வாறு யோசித்தான். எங்கள் குடும்பத்துக்கும் துணை செய்வாரா? இறைவனை நினைத்தான். கைகளைக் கூப்பினான். ''இறைவா எங்களுக்கும் உதவி செய்.'' மனதுக்குள் கேட்டுக்கொண்டான்.

சுந்தரம் வீட்டுக்கு வரும்போது ஏதாவது கொண்டு வருவார். அல்லது விருந்தாளியுடன் வருவார். ஒருநாள் அவரோடு புதிய விருந்தாளி வந்தார். அவரைக் கண்டதும் குழந்தைகளின் கண்கள் விரிந்தன. விருந்தாளி முதலில் வெட்கப்பட்டார். அப்பாவின் பின்னால் ஒளிந்தார். ஒளிந்திருந்து பார்த்தார். மறுநாளே நண்பராகி விட்டார். எல்லாரோடும் பழகிவிட்டார்.

''அப்பா இவருக்கு என்ன பெயர்?'' சீதா கேட்டாள். ''இவர்தான் நம் இராமன். இவர் இனி நம்மோடுதான் இருப்பார். இந்தக் குடும்பத்தில் இராமனும் ஒருபிள்ளை. அவனுக்கும் ஒரு இடமுண்டு.'' அப்பா கூறினார். கண்ணன் இராமனிடம் பிரியமாக இருந்தான். ஆடுகளைப் பார்ப்பான். முதலில் ஆடுகள் விரட்டின. பின் இராமனைச் சேர்த்துக் கொண்டன. ஆட்டுப் பட்டியில் முதிர்ந்த ஆடு இருந்தது. அதனை ஆச்சி என்று செல்லமாக அழைப்பார்கள். ஆச்சி தன்குட்டிக்குப் பால் கொடுக்கும். அப்போது இராமனுக்கும் ஊட்டும். ஒரு முரட்டுக் கடாவும் இருந்தது. அதன் பெயர் வீமா. அதனோடு விளையாடு வான். முரடு நண்பனாக மாறிவிட்டது. அதன் கொம்பைப் பிடிப்பான். ஓடியாடி விளையாடுவான். அதில் ஏறிச் சவாரி விடுவான். இராமன் நன்றாக வளர்ந்து விட்டான். கண்ணனுக்கு உதவியாக இருப்பான். கண்ணன் பாடசாலையை மறக்கவில்லை. அவனுக்குப் படிப்பதற்கு ஆசை. ஆவலும் அதிகரித்தது. ஆனால் வசதிதான் கிடைக்கவில்லை. மனம் பாடசாலையிலேயே இருந்தது.

ஆசிரியர் முகுந்தன் வகுப்பைத் தொடங்கினார். அது ஐந்தாம் வகுப்பு. பெயர்களை அழைத்தார். வகுப்பில் உள்ளவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமொழி கூறினார்கள். கண்ணனின் பெயர் அழைக்கப்பட்டது. மறுமொழி வரவில்லை. ஆசிரியரின் கண்கள் வகுப்பை நோக்கின. கண்ணன் வரவில்லை. அவனது பெயருக்கு நேராக முட்டைகள் அடைகாத்தன. அடிக்கடி கண்ணன் பாடசாலைக்கு வருவதில்லை. அவன் மிகவும் கெட்டிக்காரன். ஆசிரியரின் நன்மதிப்பைப் பெற்றவன். ஆசிரியர்கள் கண்ணன் மேல் கரிசனை காட்டினார்கள். முகுந்தன் ஆசிரியர் மிகவும் நல்லவர். மாணவர்களது கல்வியில் நாட்டங் கொண்டவர். கண்ணனோடு இன்னும் சிலர் வரவில்லை. ஒரு தாளில் குறித்துக் கொண்டார். பாடம் நடந்தது. பாடசாலையும் முடிந்தது.

ஆசிரியர் சில மாணவர்களோடு புறப்பட்டார். அவரது சைக்கிளில் காந்தன் இருந்தான். அவன்தான் வழிகாட்டி. சைக்கிள் பள்ளம் படுகுழிகளில் துள்ளிச் சென்றது. பின்னால் இரண்டு சைக்கிள்கள் தொடர்ந்தன. அந்த வழியால்தான் அவர்கள் செல்லவேண்டும். ''சேர்! அதோ அதுதான் கண்ணன் வீடு.'' காந்தன் வீட்டைக் காட்டினான். அந்தவீடு அடையாத வாயிலகம். வேலியில்லை. வீடுகளுக்குக் கதவுகளும் இல்லை. சுவரில்லை. கூரை தென்னோலையால் வேயப்பட்டது.

சுவருக்குப் பதிலாக ஓலைகள். நாலா பக்கமும் தொங்கின. காற்றில் அசைந்தன. யானை அசைவது போலிருந்தது. வீதியிலிருந்து விலகி இருந்தது. ஒற்றையடிப் பாதை வழி காட்டியது. ஒரு வயல்வெளி நடுவில் நாலைந்து கொட்டில்கள் தெரிந்தன. வரம்பில் சைக்கிள் சறுக்கியது. காலை நிலத்தில் ஊன்றினார். விழாது தப்பினார்கள். ஆசிரியரைக் கண்டதும் கனகம்மா ஓடிவந்தாள். கையெடுத்துக் கும்பிட்டாள்.

''வாங்கையா..'' வரவேற்றாள். ஆசிரியர் சூழலைக் கவனித்தார். மிகவும் கஸ்டமான சூழல். அவர்களுக்காக வருந்தினார். வந்த நோக்கத்தை வெளிப்படுத்தினார். ''அம்மா கண்ணன் எங்கே? கண்ணன் பள்ளிக்கு வரவில்லையே ஏன்?'' என்றார். ''என்னையா செய்வது? நாங்கள் ஏழைகள். அவன் ஆடு மேய்க்கப் போயிருக்கான்.'' கவலையோடு அந்தத் தாய் கூறினாள். ''அவன் கெட்டிக்காரன். நன்றாகப் படிப்பான். அவனை ஒழுங்காக அனுப்புங்கள். அவனை ஆளாக்குவது எங்கள் பொறுப்பு''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அன்பாக உரையாடினார். ''ஐயா கண்ணன் படிக்க வேண்டும். அதுதான் எங்கள் விருப்பம். அடுத்த கிழமை கட்டாயம் வருவான். நான் அனுப்பி வைப்பேன்.'' என்றாள். அவளது வார்த்தையில் நம்பிக்கை இருந்தது. அவர் சென்று விட்டார்.

கண்ணன் அங்கு இல்லை. அவன் ஆடுகளோடு சென்றுவிட்டான். கூடவே இராமனும் சென்றுவிட்டான். மாலையாகியது. ஆடுகள் வரிசையாக வரும். ஆச்சிதான் முன்னால் செல்லும். பின்னால் மற்றைய ஆடுகள் தொடரும். இறுதியாக வீமா வரும். இராமன் ஆச்சிமேல் சவாரி போவான். அல்லது வீமாவின் மேல் பயணிப்பான். வயற்பக்கம் இருந்து ஆடுகள் வரும். வீதியைக் கடக்கவேண்டும். வாகனப் போக்கு வரத்து அதிகம். கண்ணன் ஆடுகள் வரும்போது வாகனங்களை நிறுத்துவான். சாரதிகளும் ஆடுகள் வீதியைக் கடக்கும் வரை காத்திருப்பார்கள். அவை கடந்ததும் வாகனங்கள் போகும். இராமன் இவற்றை அவதானித்தான். பழக்கியும் வந்தான்.

கண்ணன் வந்தான். ஆசிரியரின் வருகையை அம்மா கூறினாள். ஆசிரியர் அவன்மேல் வைத்த அன்பை மதித்தான். காலையில் நேரத்துக்கு விழித்தான். கடமைகளைச் செய்தான். ஆடுகளைத் துரத்தினான். வீதியைக் கடந்து வயற்பக்கம் துரத்தினான். இராமன் துணை போனான். ''இராமா நான் பாடசாலை செல்கிறேன். வரும்வரை ஆடுகள் கவனம். சாப்பாடு கொண்டு வருவேன்''. தடவிக் கொடுத்தான். ஆச்சி உற்றுப் பார்த்தது. ''ஆச்சி இராமனுக்குப் பசித்தால் பால் கொடு. இராமா பசித்தால் ஆச்சியிடம் பால் குடி. சரியா?'' கூறினான். விடைபெற்று ஓடினான்.

பாடசாலை தொடங்கும் மணி ஒலித்தது. வகுப்பறையில் நுழைந்தான். ஆசிரியர் முகுந்தன் புன்னகைத்தார். அவருக்குச் சந்தோசமாக இருந்தது. வகுப்பை நோட்டம் விட்டார். அனைவரும் ஏழைகள். ஆனால் அவர்களிடம் திறமை இருந்தது. சந்தர்ப்பம் வழங்கினால் திறமை வெளிவரும். சிறுவர்கள் இந்த நாட்டின் தலைவர்கள். அவர்கள்தான் ஒரு நாட்டின் தலைவிதியைத் தீர்மானிப்பவர்கள். அறிவின் சுரங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள்தான். அவர்களுக்கு நல்வழியைக் காட்ட வேண்டும். அமைதியும் அபிவிருத்தியும் நாட்டுக்குக் கிடைக்கும். முகுந்தன் மனதினுள் நினைத்தார். பாடம் நடந்தது.


பாடசாலை விட்டதும் கண்ணன் விரைந்தான். ஓட்டமும் நடையுமாக ஓடினான். நண்பர்களோடு கதைக்கவும் இல்லை. வீட்டுக்கு ஓடினான். அம்மா கொடுத்த உணவை எடுத்தான். தண்ணீரையும் எடுத்துக் கொண்டு பறந்தான். ஆடுகள் மரநிழலில் ஓய்வெடுத்தன. அசைபோட்டவாறு படுத்திருந்தன. இராமனைக் காணவில்லை. ''இராமா.. இராமா'' குரல் கொடுத்தான். இராமன் மரத்தில் இருந்து இறங்கி வந்தான். இருவரும் ஒன்றாக இருந்து உண்டார்கள். இராமன் சைவ உணவுதான் சாப்பிடுவான். மரக்கறிதான் வேண்டும். காய்கனி, கீரைகள்தான் அவனது உணவு. சற்று நேரம் ஓய்வெடுத்தார்கள். ஆடுகள் மீண்டும் மேயத் தொடங்கின. மரங்களில் ஏறி இலைகுளைகளைப் பறித்தார்கள். இராமன் உச்சங்கிளைகளில் உலா வந்தான். ஆடுகள் நன்றாக மேய்ந்தன. ''இராமா நேரம் சரி. ஆடுகளை ஒன்றுசேர். புறப்படுவோம்.'' இராமன் ஓடினான். ஆடுகள் இராமனின் கட்டளைக்குப் பணிந்தன. வரிசையாகப் பயணித்தன.

வீதி தெரிந்தது. கண்ணன் முன்னால் போனான். கைகளைக் காட்டினான். சாரதிகளுக்குப் புரிந்தது. வாகனங்கள் நின்றன. ''இராமா ஆடுகளைக் கலைத்துவா. கெதியாக.. கெதியாக.. வா..வா.'' கட்டளை இட்டான். இராமன் விரைந்து செயற்பட்டான். ஆடுகள் வீதியைக் கடந்தன. கண்ணன் நன்றி தெரிவித்தான். இரு கைகளாலும் சலூற் அடித்தான். பதிலுக்குச் சாரதிகளும் சிரிப்போடு சலூற் அடித்தார்கள். வாகனங்கள் விரைந்து சென்றன. இது இப்போது வழமையாகி விட்டது. கண்ணனையும் ஆடுகளையும் வீதியில் கண்டதும் வாகனங்கள் நிற்கும்.

கண்ணன் பாடசாலைக்குப் புறப்படுவான். ஆடுகளையும் கலைத்துச் செல்வான். வீதியைக் கடந்து வயல் பக்கம் விடுவான். இராமன் ஆடுகளுக்குத் துணையிருப்பான். கண்ணன் விரைந்து பாடசாலைக்குச் செல்வான். பாடம் முடிந்ததும் வீடு. பின் வீட்டிலிருந்து வயற்புறம் ஓடுவான். இராமனோடு சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடுவான். இராமன் ஆடுகளைப் பார்ப்பான். கண்ணன் படித்த பாடங்களை மீண்டும் படிப்பான். ஓட்டமும் நடையும் கண்ணனது வாழ்க்கையானது. ஐந்தாம் வகுப்பிலும் முதல் மாணவன். ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசில் பரீட்சை இருக்கிறது. அதில் சித்தியடைந்தால் புலமைப் பரிசில் கிடைக்கும்.

கண்ணன் சாப்பாட்டை எடுத்தான். வயற்புறம் விரைந்தான். ஆடுகள் கதறியபடி ஓடின. ஆச்சி ஆடு ஆவேசமாக நின்றது. அதன்பின்னால் மற்ற ஆடுகள் திரண்டன. வீமாவின் பிடரிமயிர் சிலிர்த்தது. ஒருபுறம் தயாராகிக் காவலிருந்தது. குட்டிகள் பக்கம் இராமன் நின்றான். அவன் கையில் தடியிருந்தது. நரி சுற்றிச் சுற்றி வந்தது. அதன் வேட்டை ப் பற்கள் வெளியில் தெரிந்தன. இராமன் பயங்கரமாகச் சத்தமிட்டான். பாய்ந்து விரட்டினான். ஆடுகளும் நரியை எதிர்த்துப் போராடின. இராமன் மரத்தில் ஏறியிருந்தான். சந்தர்ப்பம் வந்தது. நரியின் மேல் ஒரே பாய்ச்சல். நரியின் காதுகள் இராமனின் பிடியிலிருந்தன. அவற்றை அசையாது இறுக்கி யிருந்தான். அதன் முதுகில் கடித்தான். நரி பயங்கரக் குரலில் ஓலமிட்டது.

அப்படியே விட்டு மரத்தில் பாய்ந்தான். நரி ஓலமிட்டவாறு ஓடியது. இராமன் வெற்றிக் களிப்பில் இருந்தான். ஆடுகள் அவனைச் சூழ்ந்து கொண்டன. கண்ணன் நிலைமையைப் புரிந்து கொண்டான். நரியினால் கெடுதி இனியில்லை. கண்ணனுக்குத் தைரியம் பிறந்தது. கூடவே நம்பிக்கையும் வந்தது.

கண்ணன் விரைவாகப் புறப்பட்டான். அவனது அவசரத்துக்கு என்ன காரணம்? புலமைப் பரீட்சை நெருங்கி விட்டது. அவன் புலமைப் பரீட்சையில் சித்தியடைவான். அவன் மிகவும் கெட்டிக்காரன். படித்து முன்னுக்கு வருவான். வரவேண்டும். அவனுக்கு உதவவேண்டும். ஆசிரியர் யோசித்தார். இதனையிட்டு அதிபரோடு உரையாடினார். ஆசிரியர்களோடும் கதைத்தார். மாணவர்களோடு சேர்ந்து தகவல் சேகரித்தார். அவனது நடத்தைக்கான காரணங்களைத் தேடினார்கள். அவனுக்குத் தெரியாமல் பின் தொடர்ந்தார்கள். விபரங்களை அறிந்து கொண்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை நடந்தேறியது. மாவட்டத்திலேயே முதற்பிள்ளையாகத் தேறினான். அவனைப் பாடசாலை கௌரவிக்க எண்ணியது. அந்த நாளுக்காகப் பாடசாலை காத்திருந்தது..

பாடசாலை விட்டது. கண்ணன் வீட்டுக்கு ஓடினான். சாப்பாட்டை எடுத்தான். இராமனிடம் சென்றான். சாப்பாடு முடிந்தது. ஓய்வெடுத்தான். இராமன் மரத்தில் ஏறிப் பழங்கள் பிடுங்கி வந்தான். உண்டார்கள். ''என்ன இராமா வீட்டுக்குப் போவோமா?'' கண்ணன் கேட்டான். இராமனுக்கு நேரம் பழகி விட்டது. தனது கைகளைப் புருவங்கள் மேல் வைத்தான். அவன் சூரியனைப் பார்த்தான். விரைந்து ஆடுகளை ஒன்று சேர்த்தான். அவனது கையில் தடி இருந்தது. ஆடுகள் ஒன்று சேர்ந்தன. ஆச்சி முன்னால் நடந்தது. இறுதியாக வீமா போனது. ஆச்சியின் முதுகில் இராமன் சவாரி தொடங்கியது. பாதி வழியில் கீழே குதித்தான். பின்நோக்கி ஓடினான். விலகிப் போகும் குட்டிகளை வழிப்படுத்தினான். வீமாவில் பாய்ந்து ஏறினான். வீதி தெரிந்தது. இறங்கி முன்னால் பாய்ந்து ஓடினான். வீதியில் நின்று வாகனங்களை மறித்தான். வாகனங்கள் நின்றன. தோளில் தடி இருந்தது. தடியை இரு கைகளும் பற்றியிருந்தன. இடையன் போல் தோற்றமளித்தான். ஆடுகள் போகும் வரை காத்திருந்தான். ஆடுகள் வீதியைக் கடந்தன. இராமன் வாகனங்களுக்கு சலூற் காட்டினான்.

வாகனத்தின் சாரதிகள் புன்னகைத்தார்கள். அவர்கள் கையசைத்துச் சென்றார்கள். அவர்களுக்குப் பெரிய ஆச்சரியம். கண்ணனுக்கும் புதுமையாக இருந்தது. வீடு வந்தது. ஆடுகள் பட்டியினுள் புகுந்தன. கண்ணன் நடந்தவற்றை அம்மாவிடம் கூறினான். அம்மா இராமனை அன்புடன் தடவிவிட்டார். இராமனுக்குப் பெரிய மகிழ்ச்சி. உணவின் போது அம்மா கூறினாள். ''கண்ணன்! வாத்தியார் ஐயா வந்திருந்தார். நீ சோதனை பாஸாம். நாளைக்குப் பின்னேரம் குடும்பத்தோடு வரட்டாம்.'' அம்மா சொல்லி வைத்தாள். அப்பா வந்ததும் சொன்னார்கள். அவர் தலையை ஆட்டினார்.

அடுத்தநாள் மாலை பாடசாலை கலகலத்தது. ஊர்மக்கள் கூடியிருந்தார்கள். சோதனையில் பாஸாகிய பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தவாறு இருந்தார்கள். அவர்களது பெற்றோரும் குழுமி யிருந்தனர். வாகனங்கள் வந்து நின்றன. பல பிரமுகர்கள் வந்தார்கள். சித்தியடைந்த பிள்ளைகள் முதல் வரிசையில் அமர்ந்திருந்தனர். ஒலிபெருக்கி அதிர்ந்தது. சம்பிரதாயங்கள் நடந்தன. மேடையில் பல உயரதிகாரிகள் இருந்தார்கள். பரிசளிப்பு வைபவம் தொடங்கியது. கண்ணனை மேடைக்கு அழைத்தார்கள். அவனுடன் நண்பன் இராமனும் சென்றான். சிறுவர்கள் குரங்கு எனச் சத்தமிட்டார்கள். கண்ணன் சிரித்தான். ''உங்களுக்கு இவன் குரங்கு. ஆனால் எனக்கு இவன் தம்பி. எனக்குப் படிக்க உதவி செய்த நண்பன். இவன் இல்லாவிட்டால் நான் படித்திருக்க முடியாது.'' மனதில் கூறிக்கொண்டான்.

முகுந்தன் கண்ணனை அறிமுகம் செய்தார். அவனது குணாதிசயங்களைச் சொன்னார். அவனது நண்பன் இராமனைப் பற்றி விவரித்தார். இந்தக் கிராமத்திலிருந்து படித்தவர்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். கண்ணன் இந்தக் கிராமத்தின் விடிவெள்ளி. பெற்றோருக்கும் உதவி செய்வான். பாடங்களையும் படிப்பான். அவன் படிப்பதற்குப் பட்ட கஸ்டங்களை நேரில் பார்த்தோம். ஓட்டமும் நடையும் அவனது வாழ்க்கை. ஆசிரியர்கள் அவனது நாளாந்த நடையைக் கண்டார்கள். அவனுக்கு ஒரு சைக்கிளைப் பரிசளிக்கிறார்கள். அதனை அதிபர் அவர்கள் வழங்குவார்கள் என்றார். அதிபர் சைக்கிளை கண்ணனுக்கு வழங்கினார். மண்டபம் கரகோசத்தால் அதிர்ந்தது. ''கண்ணனின் குடும்பம் கஸ்டப்பட்டது. அவர்களுக்கு வீடும் கட்டிக் கொடுக்கப்படும். அதற்கான ஏற்பாட்டை அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளான். மேற்படிப்புப் படிக்க நிதியுதவியும் கிடைக்கும்.'' முகுந்தன் பேசிக்கொண்டு போனார்.

கண்ணன் ''கடவுளே நீ ஏழைகளுக்கு உதவுபவன்தான். என் பிரார்த்தனை வீணாகவில்லை என்றும் உன்னை என் மனம் நினைக்கவேண்டும். உன் நினைவில் இருந்து சேவையாற்ற அருள்புரி.'' மனதினிலே தியானித்தான். ஆசிரியர்களைப் பார்த்தான். அவனது கண்களிலே கண்ணீர். நெஞ்சுருகினான். ''ஐயா உங்களில் நான் கடவுளைக் காண்கிறேன். எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டும் தெய்வங்கள். என்னை வாழ்த்துங்கள்.'' அதிபர் ஆசிரியர்களின் கால்களில் வீழ்ந்து வணங்கினான். இராமனும் கண்ணனைப் போல் வணங்கினான். அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

கண்ணன் மேற்படிப்பு வெளியூரில் தொடர்ந்தது. பாடசாலை விடுமுறை நாட்களில் கண்ணன் வருவான். புதுச் சைக்கிளில் கண்ணன் வலம் வருவான். இராமன் பின்னால் இருப்பான். காலையும் மாலையும் இராமனின் கடமை தொடரும். கடமையைப் பார்க்கப் பலர் வீதியில் கூடுவார்கள். இராமன் ஆடுகளோடு வருவான். வாகனங்களை நிறுத்துவான். ஆடுகள் வீதியைக் கடக்கும். கடந்ததும் சாரதிகளுக்குச் சலூற் அடிப்பான். அவர்கள் பதிலுக்குச் சிரிப்போடு கையசைப்பார்கள். அதனைப் பார்ப்பதற்காக சனக்கூட்டம் காத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவங்கிளிகள்

சுலக்சிகாவின் கண்கள் மரத்தையே பார்த்தன. உயர்ந்து வளர்ந்த நாவல் மரம். அதில் மரங்கொத்தித் தச்சனால் அமைந்த பொந்துகள். அவற்றில் சில மைனாக்களின் மாளிகைகள். சில கிளிகளின் உல்லாச வீடுகள். அவற்றில் இருந்து பறவைகளின் அட்டகாசங்கள். தூரத்தில் இலவமரம். அதன் விநோதமான வளர்ச்சி. சீராக அமைந்த கிளைகள். பச்சை நிறத்திலான தண்டுகள். பச்சைப் பசேலென இலைகள். காற்றில் பட்டாம்பூச்சிகளாகப் படபடத்தன. அதன் கிளைகளில் பச்சைக் கிளிகளின் கும்மாளம். கிளைகளில் பாய்ந்து கரணமடித்தன. இலைகளுக்குள் தம்மை மறைத்துக் கொண்டன. கிளிகள் எங்கே? தேடினாள். இலைகளுக்கும் கிளிகளுக்கும் வித்தியாசம் புரியவில்லை. அவற்றின் ஒலி வந்தால் மட்டும் காணலாம். சுலக்சிகா விநோதமாகப் பார்த்தாள். சிலவற்றின் சொண்டுகள் தெரிந்தன. பச்சைக்குள் செக்கச் சிவப்பாகத் தெரிந்தன.

மைனாக்கள் சண்டையிடும். கீரடிமாரடிச் சத்தம் காதையடைக்கும். சற்று நேரத்தில் சீட்டியடித்துப் பாடும். கிளிகள் கிக்கீக்கி பாடும். ஒன்றையொன்று துரத்தும். பாட்டமாகப் பறக்கும். பச்சை இலவமரத்தில் பரவசமடையும். கரணமிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழும். இலவமரம் நிறைந்து காய்கள். அவையும் கிளிகளைப் போலவே இருந்தன. கிளிகள் அவற்றைக் கிள்ளிப் பார்க்கும். மைனாக்கள் சிரிக்கும். ''ஏய் கிளிகளே ஏமாறாதீர்கள். அவை பழுக்கும். ஆனால் சாப்பிட முடியாது.'' அதனைச் சீட்டியடித்துக் காட்டும். கூக்குரல் இட்டுக் கத்தும்.

''இது என்ன கூட்டம்? இந்த மைனாக்களுக்கு விசரா? இப்படிச் சத்தமிடுகின்றன. இவர்கள் சொல்லித்தான் தெரியவேண்டுமா? மனிதர்கள் தப்புக்கணக்குப் போட்டுள்ளார்கள். அவர்கள்தான் ஏமாந்தவர்கள். நாங்கள் புத்திசாலிகள். அது எங்களுக்குத் தெரியும்.'' ஒரு வாயாடிக் கிளி கூறியது. ''காது கொடுக்காதே. உன் வேலையைப் பார். சிலர் இப்படித்தான். பிறரைக் கேலி செய்வதே பொழுது போக்கு. திருந்தாத ஜென்மங்கள்.'' முதுமைக் கிளிகள் சத்தமிட்டன. சின்னக் கிளிகள் சத்தமிட்டன. பாடுவதற்காக மெட்டெடுத்தன. சில பாடத்தொடங்கின.

**கிக்கி கிக்கி கீக்கிகீக்**
**கிக்கி கிக்கி கீக்கிகீக்**

**இந்த உலகம் இனியது**
**எங்கள் வாழ்வும் இனியது**
**எந்தத் துயரும் இல்லையே**
**இன்பம் எங்கள் வாழ்க்கையே.**

இளங்கிளிகள் பாடின. சிறகடித்துப் பறந்து வட்டமிட்டன. மீண்டும் வந்திருந்தன. கிளிகள் கீழே பார்த்தன. சுலக்சிகா கையில் தென்னோலையை வைத்திருந்தாள். ஓலையின் தலைப்பகுதி ஒரு கையிலிருந்தது. தலையிலிருந்து மூன்றங்குலம் அளந்தாள். அந்த இடத்தில் பிடித்தாள். வால் பகுதி கீழே தொங்கியது. அவளது கைகள் ஓலையைத் தடவின. பிடித்த இடத்தின் கீழே விரல் நகத்தால் துளையிட்டாள். அப்படியே ஓலையை ஈர்கிலில் இருந்து கிழித்தாள். ஈர்க்கிள் தனியாக இருந்தது. இருபுறமும் ஓலையின் கூந்தல்கள் தொங்கின. ஓலைக் கூந்தல்களின் நடுப்பகுதி அவள் கைகளில் இருந்தன. ஈர்க்கிள் நடுவில் தொங்கியது. அதனைச் சுழற்றி இருபுறமும் ஆட்டினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிகள் கவனமாகப் பார்த்தன. ''ஏய் அங்கே பார். சின்னக் கிளி பறக்கிறது.'' கிளிகள் அனைத்தும் பார்த்தன. சுலக்சிகா நிறங்களை எடுத்தாள். தலைப்பக்கம் சிவப்பு நிறத்தைக் கொடுத்தாள். அது கிளியின் சொண்டு போல் ஆனது. அசல் கிளிதான். கிளிகள் சத்தமிட்டன. நிமேசிக்கா ஓடிவந்தாள். ''அக்கா இங்கே பார். இது என்ன சொல் பார்ப்போம்?'' சுலக்சிகா கேட்டாள். நிமேசிக்கா சிரித்தாள். அவளும் ஒரு ஓலையைப் பிடுங்கினாள். அதேபோல் செய்தாள். இருவரும் அவற்றை அசைத்தனர். பாட்டு வந்தது.

**பச்சைக் கிளியொன்று பறக்குது.**
**பாடிப் பாடிப் பறக்குது**
**இச்சை கொண்டு பறக்குது.**
**இரையைத் தேடிப் பறக்குது.**

**கண்ணை உருட்டிப் பார்க்குமாம்.**
**கரணம் அடித்துப் காட்டுமாம்.**
**வண்ணப் பச்சை போர்வையாம்**
**வாயில் சிவந்த சொண்டதாம்.**

பாடி விளையாடினார்கள். மைனாக் கூட்டம் பார்த்தன. சீட்டி அடித்துப் பின்னணி இசையூட்டின. கிளிகள் பரவசம் அடைந்தன. ''அக்கா கிளிகள் இலவமரத்தைப் பார்க்கின்றன. மரத்தில் காய்கள் தொங்குகின்றன. அவற்றைப் பறந்து பார்த்து வருகின்றன. கவனித்தாயா?'' சுலக்சிகா கூறினாள். ''சிறகிருந்தால் நாமும் பறக்கலாம். வானில் வட்டமடிக்கலாம். மேகத்திற்குள் நுழைந்து வரலாம்.'' நிமேசிக்கா கற்பனையில் மிதந்தாள். 'அக்கா கிளிகள் பாவம்.'' சுலக்சிகா தொடர்ந்தாள்.

''ஏன் பாவம்?'' நிமேசிக்கா கேட்டாள். ''நாங்கள் படித்த கதை நினைவில்லையா?'' சுலக்சிகா நினைவூட்டினாள். ''இலவு காத்த கிளிகள். அந்தக் கதையா? அது கதைதானே. அது நமக்காகச் சொன்ன கதை. ஆனால் கிளிகள் புத்திசாலிகள். இன்னும் சில நாட்களில் காய்கள் பழுத்துவிடும். பஞ்சு எட்டிப்பார்க்கும். அப்போது அவற்றைப் பார்ப்போம். சரியா?'' பேசிக் கொண்டார்கள். அம்மா அழைத்தார். வீட்டினுள் நுழைந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் சுலக்சிகா இலவமரத்தை நோட்டம் விட்டாள். இலவமரத்தில் பச்சைக் காய்கள் இல்லை. அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''அக்கா அங்கே பார். வௌவால்கள் தொங்குகின்றன.'' சுலக்சிக்கா சத்தமிட்டாள். நிமேசிக்கா சிரித்தாள். ''அவை வௌவால்கள் இல்லை. இலவங்காய்கள் முற்றிப் பழுத்து விட்டன. தோல் கறுப்பாக மாறியுள்ளது. பின் வெடிக்கும். வெண்பஞ்சு எட்டிப்பார்க்கும். காற்று வீசும். அந்த ஆட்டத்தில் விதையுடன் பஞ்சு வெளியேறும். அதனைக் காற்று அள்ளிச் செல்லும். காற்றில் பாரசூட் விரித்துப் பஞ்சு பறக்கும். விதை தூரத்தில் விழும். பின் முளைத்து மரமாகும். இது இயற்கையின் விளையாட்டு. கடவுளின் ஏற்பாடு. இதனை விதைகளின் பரம்பல் என்பார்கள். நமது அப்பா சொன்னது நினைவில்லையா?'' நிமேசிக்கா விளக்கத்தோடு கூறினாள்.

''அக்கா பரசூட் எப்படி இயங்குகிறது?'' சுலக்சிகா வினவினாள். ''சொன்னால் விளங்காது. செய்து பார்த்தால் விளங்கும்.'' வீட்டுக்குள் சென்றாள். சாப்பாடு பொதிசெய்யும் 'லஞ்சீற்' எடுத்தாள். நூலும் வந்தது. லஞ்சீற்றின் மூலைகளில் நூலைக் கட்டினாள். நான்கு நூல் நுனிகளையும் ஒன்று சேர்த்தாள். சிறிய தடித்த மரத்துண்டை அதில் கட்டினாள். வீட்டின் மொட்டை மாடிக்கு வந்தாள். அங்கிருந்து மேல்நோக்கி எறிந்தாள். அது உயரத்துக்குப் போனது. போனதுபோல் இறங்கியது. ஆச்சரியம் காத்திருந்தது. காற்று லஞ்சீற்றை விரித்தது. அது குடைபோல் விரிந்தது. மெதுவாகக் கீழ்நோக்கி வந்தது. ''அதோ பார். அதுதான் பரசூட்.'' சத்தமிட்டாள் நிமேசிக்கா. சுலக்சிகா தனது கைக்குட்டையை எடுத்து அதேபோல் செய்து எறிந்தாள். காற்று விரித்து பரசூட்டைப் பறக்க வைத்தது. மகிழ்ச்சியால் துள்ளினார்கள். ''ஏய் நாங்கள் விஞ்ஞானிகள். புதுமையைப் படைப்போம்.'' சத்தமிட்டார்கள். மைனாக்களும் கிளிகளும் ஆரவாரித்தன.

நிமேசிக்சிக்கா மேலே பார்த்தாள். ''சுலக்சி அங்கே பார். கிளியும் மைனாவும் பக்கத்தில் இருக்கின்றன. ஏதோ கதைக்கின்றன. பார்... பார்.'' நிமேசிக்கா காட்டினாள். சுலக்சிகா உற்றுப் பார்த்தாள். அவை ஏதோ பேசின. விளங்கியது போல் இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் புரிந்து கொண்டார்கள். ''ஏய் நாங்கள் சொன்னோம் தானே? இலவம்பழம் பழுக்கும். ஆனால் சாப்பிட முடியாது என்று. இப்போது நடந்தது என்ன?'' மைனா கிளியிடம் சொன்னது. கிளிகள் சிரித்தன. ''ஏய் மைனாக்குஞ்சே உனக்குப் புத்தியில்லை. உனக்குப் புரியாது. என் வீட்டை வந்து பார். அப்பொழுது விளங்கும். என்னுடன் வா.'' அழைத்தது.

கிளி முன்னே சென்றது. பின்னால் மைனா விரைந்தது. கிளி உள்ளே நுழைந்தது. மைனா வெளியிலேயே நின்றது. ''வெளியே நிற்காதே. உள்ளே வா. வந்து பார்.'' சத்தமிட்டது. வெட்கப்பட்டு உள்ளே சென்றது. மைனா பார்த்ததும் பிரமித்து விட்டது. கிளியின் வீடு மரப்பொந்தினுள் இருந்தது. பல அறைகள் காணப்பட்டன. இலவம் பஞ்சு அழகூட்டியது. குஞ்சுகள் பஞ்சணையில் உறங்கின. வயது முதிர்ந்த கிளிகள் ஓய்வெடுத்தன. உள்ளே வெதுவெதுப்பாக இருந்தது. கிளிகள் மேல் மைனாவுக்கு மதிப்பேற்பட்டது. வெளியில் வந்து சீட்டியடித்தது.

மைனாக்கள் பறந்து வந்தன. ஒவ்வொன்றாக உள்ளே நுழைந்து வந்தன. கிளிகளும் ஒன்று சேர்ந்தன. கிளிகளுக்குப் பெருமையாக இருந்தது. மைனாக்கள் சேர்ந்து ஆரவாரித்தன. முதிர்ந்த மைனா சிறகைக் கோதியது. சிலிர்த்தது. உரத்த குரலில் பேசியது. ''இவ்வளவு காலமும் ஏமாந்த கிளிகள் என்றிருந்தோம். இன்றுதான் உண்மையை அறிந்தோம். நீங்கள் ஏமாறவில்லை. காலம் கனியும்வரை காத்திருந்தீர்கள். இலவம்பஞ்சு மரப் பொந்தை மென்மையாக்கும். குளிர் காலத்தில் சுகத்தைத் தரும். இவற்றை நாங்கள் யோசிக்கவில்லை. எங்களுக்கும் இதனைக் கற்றுத்தாருங்கள்.'' என்றது.

''மைனாக்களுக்கு உதவுவோம். புறப்படுங்கள்.'' தலைமைக் கிளி கட்டளையிட்டது. கிளிகள் பறந்தன. தொடர்ந்து மைனாக்கள் பறந்தன. ஆரவாரம் வானைப் பிளந்தது. இலவம்பஞ்சு பரகூட்டை விரித்தது. அவற்றைக் காற்று ஏந்தியது. பறக்க விட்டது. மைனாக்களும் கிளிகளும் பறந்தன. அது அற்புதமான காட்சியாக இருந்தது. சகோதரிகள் மெய்மறந்து ரசித்தார்கள். அவற்றின் சொண்டுகள் பஞ்சினை வேட்டையாடின. வேட்டையாடும்போது ஆளையாள் உரசி மோதின. ஆரவாரித்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசித்தன. மைனாக்களின் வீட்டை நோக்கிப் பறந்தன. சில கிளிகள் வீட்டைச் செப்பனிட்டன. கரடுமுரடான பொந்து அழகிய வீடாகியது. மைனாக்களுக்குச் சந்தோசம். அழகான சொகுசு வீடுகள் கிடைத்தன. மைனாக்கள் வீட்டினுள் புகுந்தன. குதித்துப் புரண்டு பார்த்தன. சுகமாக இருந்தது. கிளிகளும் மைனாக்களும் ஒன்றாக இருந்தன. கிளிகள் மெட்டெடுத்தன.

**கிக்கி கிக்கி கீக்கிகீக்**
**கிக்கி கிக்கி கீக்கிகீக்**

மைனாக்களும் சேர்ந்து கொண்டன. ஒன்றாகப் பாடின.

**இந்த உலகம் இனியது**
**எங்கள் வாழ்வும் இனியது**
**எந்தத் துயரும் இல்லையே**
**இன்பம் எங்கள் வாழ்க்கையே.**

''நாங்கள் இன்றிலிருந்து இலவங்கிளிகள்.'' முதிர்ந்த மைனா கூறியது. ஆமோதித்து அனைத்தும் சேர்ந்து சத்தமிட்டன. சந்தோசத்தால் வானில் பறந்து விளையாடின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சின்னச் சிலந்தி

ஒரு குட்டிச் சிலந்தி இருந்தது. அதற்குத் தன்னிடம் உள்ள ஆற்றலைத் தெரியாது. படு சோம்பேறியாக இருந்தது. அப்பா அம்மா தரும் உணவை உண்ணும். கூட்டாளிகளோடு உலா வரும். உண்டபின் உறங்கும். நாட்கள் சென்றன. இந்தக் குட்டிச் சிலந்தி உழைப்பதாக இல்லை. அம்மாவும் அப்பாவும் அறிவுரை கூறின. சின்னச் சிலந்தி கேட்கவில்லை. சின்னனுக்குப் பாடம் புகட்ட நினைத்தன. இரண்டும் கூடி யோசித்தன. பின்னர் ஒரு முடிவுக்கு வந்தன. சில காலம் எங்காவது மறைந்திருக்க எண்ணின. பிள்ளையைப் பிரிவது துயரம்தான். ஆனால் பிள்ளையின் முன்னேற்றம் முக்கியம். அதற்காக தியாகம் செய்வது நல்லது. சொல்லாமல் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டன.

சின்னன் சுற்றியடித்து வீட்டுக்கு வந்தது. குட்டிச் சிலந்திக்குப் பசி. வீட்டில் யாரும் இல்லை. பெற்றாரைத் தேடியலைந்தது. எதிர்ப்பட்ட அனைத்திடமும் விசாரித்தது. பயனில்லை. சின்னனுக்கு உணவு கிடைக்கவில்லை. அழுகை அழுகையாக வந்தது. பசியால் தவித்தது. அந்த வழியால் எறும்புக் கூட்டம் சென்றது. அவை சுறுசுறுப்பாக இயங்கின. முதுகுப்புறம் சுமை தெரிந்தது. சுமையோடு வரிசையாகச் சென்றன. அவற்றை நோக்கிச் சென்றது. ஒவ்வொரு எறும்பிடமும் கதை கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னச் சிலந்தி நான்**
**சொல்லும் கதை கேளுங்கள்.**
**அண்ணன் வயிறு குடையுது.**
**உண்ண ஏதும் தாருங்கள்.**

**கண்ணை இருட்டி வருகுது.**
**காலும் உடலும் சோருது.**
**உண்ண உணவு தாருங்கள்**
**உதவி எனக்குச் செய்யுங்கள்.**

''எனக்குப் பசிக்கிறது. உணவு தாருங்கள்.'' குட்டிச் சிலந்திக்குப் பசி. பசி பொல்லாதது. பசி வந்தால் பத்தும் பறக்குமாம். குட்டிச் சிலந்திக்குப் பசி. வெட்கம் இல்லாது கெஞ்சியது. எறும்புகள் சிலந்தியைப் பொருட்படுத்தவில்லை. சுறுசுறுப்பாக இயங்கின. சிலந்தியைக் கவனிக்கவும் இல்லை. சிலந்தி முன்னும் பின்னும் ஓடியது. எறும்புகள் கவனிக்கவே இல்லை. கவலையோடு நின்றது.

ஒரு தேனி பறந்து வந்தது. அதன் முன்னால் ஓடியது. மிகவும் பணிவோடு கூறியது. ''தேனியே பசிக்கிறது. உணவு கொஞ்சம் கிடைக்குமா?'' என்றது. எறும்புகள் பார்த்துச் சிரித்தன. ''பசிக்கிறதா உழைத்துச் சாப்பிடு. அதுதான் உன்னைக் காப்பாற்றும்.'' கூறிக் கொண்டே, வேலையில் ஈடுபட்டன. தேனீ பூக்களைத் தேடிப் புறப்பட்டது. சிலந்திக்குக் கவலை பிடித்தது.

**உழைப்பு என்றால் என்னவாம்**
**உளற வேண்டாம் சொல்லுங்கள்.**
**களைப்பை போக்கும் வழியுண்டா**
**கெதியாய் சொல்லி நடவுங்கள்.**

சிலந்தி சத்தமிட்டுப் பாடியது. ''உழைப்பதா? அது எப்படி?'' சிலந்தி புதிராகக் கேட்டது. தேனீ திரும்பி வந்தது. ''உனக்கு வேண்டிய உணவை நீயே தேடவேண்டும். அதற்குரிய வழிகளைச் செய்யவேண்டும்.'' தேனி விளக்கியது. ''எனக்கு உழைக்கத் தெரியாதே. எப்படி உழைப்பது?'' சிலந்தி அப்பாவியாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டது. ''அதோ பார். எறும்புகள் உணவைத் தூக்கிச் செல்கின்றன. உணவு இருக்கும் இடத்தைத் தேடிச் செல்லும். உணவைச் சேர்க்கும். சேமித்து வைக்கும். தேவையானபோது உண்ணும். நீயும் அப்படிச் செய்யலாம். அதுதான் உழைப்பு.'' என்றது.

''நான் பூக்களைத் தேடிச் செல்கிறேன். அதில் தேன் இருக்கும். குடிப்பேன். ஒரு பகுதியை எடுத்துச் செல்வேன். தேன் கூட்டில் சேமிப்பேன். அதனை உணவு கிடைக்காத போது பாவிப்பேன்.'' தேனீ கூறிப் பறந்து விட்டது. சிலந்தி படுத்தபடியே யோசித்தது. அதற்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒரு நுளம்பு பறந்து வட்டமிட்டது. சிலந்தியின் காதுகளில் இரைந்தது. உடலில் மொய்த்தது. தனது நுகர் கொம்பினால் சிலந்தியைத் தொட்டது. சிலந்தியின் உடலில் கொம்பு ஊசிபோல் தைத்தது. சிலந்திக்கு வலித்தது. ''ஏய் என்ன செய்கிறாய்? தூரப்போ.'' சிலந்தி விரட்டியது. நுளம்பு போவதாக இல்லை. சுற்றச் சுற்றி வந்தது. சுழன்று வந்து மொய்த்தது. அதனைப் பிடிக்க முனைந்தது. முடியவில்லை. களைத்துக் கிடந்தது. கண்கள் மூடிக்கிடந்தன.

''ஏய் தூங்கு மூஞ்சி என்ன செய்கிறாய்?'' சத்தம் கேட்டுத் திடுக்கிட்டது. சுற்றிவரப் பார்த்தது. அங்கே சுண்டெலி சிரித்தவண்ணம் நின்றது. ''ஏய் ஏன் சிரிக்கிறாய்?'' ஆத்திரத்தோடு வினாவியது. சுண்டெலி மீண்டும் சிரித்தது. ''உன்னைப்போல் சோம்பேறி யாருமில்லை. யாராவது உணவு தந்தால் உண்கிறாய். உனக்குச் சுயகௌரவம் இல்லை. நீ மற்றவர்களுக்குப் பாரமாக இருக்கின்றாய். உனக்கு வெட்கமாக இல்லையா?'' சுண்டெலி சீண்டியது. ''வெட்கமா. அது என்ன? எனக்கு ஒன்றும் தெரியாது. எனது உணவை எப்படித் தேடுவது?'' சிலந்தி அழுகையோடு சொன்னது. சுண்டெலிக்குப் பாவமாக இருந்தது.

''ஏய் அங்கே பார்.'' சுட்டிக்காட்டியது. சிலந்தி உற்றுப் பார்த்தது. ஒரு சிலந்தி வலை பின்னுவதைக் கண்டது. எப்படி நூல் உண்டாகிறது? அதற்கு அதிசயமாக இருந்தது. ''என்ன பார்க்கிறாய்?'' சுண்டெலி கேட்டது. ''வலைக்கு வேண்டிய நூலை எப்படிப் பெறுகிறது?'' அதிசயமாகக் கேட்டது. ''அதன் உடலில் உள்ளது. அது உன்னுடலிலும் உள்ளது. அது இறைவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்த கொடை. தனது ஆற்றலைக் கொண்டு நூலைப் பெறுகிறது.'' சுண்டெலி கூறியது. ''எனது உடலிலும் உண்டா?'' சிலந்தி ஆவலோடு கேட்டது. ''ஆம் உண்டு. உன்னிடம் உள்ள ஆற்றல் உனக்குத் தெரியாது. முயன்று பார். தெரியும்.'' கூறிவிட்டுச் சென்றது. சின்னச் சிலந்திக்குப் பசி பிடித்தது. தனது உடலை முறுக்கியது. பிசின் போன்ற திரவம் நூலாக வந்தது. நூலின் ஒரு முனையை மரக்கிளையில் பிணைத்தது. அந்த நூலில் தொங்கிய படியே மறுகிளைக்குப் பாய்ந்தது. பாய்ந்து பாய்ந்து வலையைப் பின்னியது. தனது ஆற்றலை அது கண்டு கொண்டது. மகிழ்ச்சியோடு ஒதுங்கி இருந்தது. நிறையவே இரை தேடிவந்து சிக்கிக் கொண்டன.

**சோம்பி இருந்தால் சோறுஇல்லை**
**சொந்த புத்தி மங்கிடும்**
**கூம்பி முகம் வாடிப்போகும்**
**கொள்கை வாழ்வில் அற்றிடும்.**

**எனக்கு ராஜா நானேயானேன்**
**என்னை உணர்ந்து கொண்டேனே**
**மனதில் மகிழ்ச்சி பொங்கியெழும்**
**வாழும் வழியும் தெரிந்தேனே.**

சிலந்தி பாடி மகிழ்ந்தது. இப்போது தனது ஆற்றலைச் சிலந்தி கண்டு கொண்டது. அது இப்போது சோம்பேறி இல்லை. எறும்புக்கும் சுண்டெலிக்கும் நன்றி கூறிக்கொண்டது. ''எங்கள் செல்வமே'' சத்தம் கேட்டது. சின்னச் சிலந்தி திரும்பியது. ஆனந்தக் கண்ணீருடன் தாயும் தந்தையும் நின்றன. சின்னச் சிலந்தி ஓடோடிச் சென்றது. அவை சின்னச் சிலந்தியை ஆவலோடு கட்டியணைத்தன.

நிறைவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நூலாசிரியர் ....

ச. அருளானந்தம் அவர்கள் நாடறிந்த எழுத்தாளர். சிறுவர்களுக்காக பல நூல்களை எழுதி அகில இலங்கை சாகித்திய விருதுகளைப் பெற்றவர். வடகிழக்கு மாகாண சாகித்திய விருதினை இவரது 'காகமும் தம்பியும்' சிறுவர் நூல் பெற்றது. சிறுவர்களுக்காகச் சிறுகதைகள், பாடல்கள், நாவல்கள் என எழுதிக்கொண்டிருப்பவர். அழகிய ஓவியங்கள் இவரது நூல்களில் காணலாம். அவரது புதல்வர் திரு.ச.அ. அருள்பாஸ்கரன் அவற்றினை வரைந்துள்ளார்.

கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம் எனப் பலதுறைகளிலும் ஈடுபட்டு உழைப்பவர். இவரது 'கண்ணனும் இராமனும்' என்ற சிறுவர் நூலினை கல்வி அமைச்சின் இலங்கை தேசிய நூலபிவிருத்திச் சபை, நூலகத்திற்குத் தகுந்த நூலாகத் தேர்ந்தெடுத்துச் சான்றிதழ் வழங்கியுள்ளது. பாடசாலை நூலகங்களில் இவ்வகை நூல்கள் மாணவர்களின் சிந்தனா சக்தியை வளர்த்தெடுக்க உதவுவன. இக்கதைகளில் எளிய சிறிய வசனநடை காணப்படுகிறது. விழுமியங்கள் நிறைந்துள்ளன. புதிய விஞ்ஞானக் கருத்துக்களையும், நல்ல படிப்பினைகளையும் இந்த நூல் கொண்டுள்ளது. இவரது நூல்களை தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்று ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
அவரது பணி தொடர வாழ்த்துகிறேன்.

மனிதநேய அமைப்புக்களின்
கூட்டமைப்பு (CHA)
திருகோணமலை.

வ. கலைச்செல்வன்
மாவட்ட அதிகாரி

ISBN 955-98211-3-x
9 789559 821137

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org